[1973 மார்ச் 8

சுந்தரராஜபுரத்திலுள்ள அரிசனக் குடியிருப்பு

* 287 வினு.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், இராஜதானி ஊராட்சி மன்றப் பகுதியில் சுந்தரராஜபுரத்தில், மாலூற்று ஓடையில் மழை காலங்களில் வரும் தண்ணீரால் அரிசன மக்களின் வீடுகள சேதம் ஏற் படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அங்கு ஒரு தடுப்புச் சுவர் கட்ட உத்தேசிக்கப்பட் டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

இ) மூவாயிரம் ரூபாய் செலவில் அங்கு தடுப்புச் சுவர் ஒன்று கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இளைஞர் அணி

* 236 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1972-ம் ஆண்டில் இளைஞர் அணியில் சேர விண்ணப்பித்துக்கொண்ட வர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : 7,406 பேர் இளைஞர் அணியில் சேர விண்ணப்பித்துக்கொண்டனர்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில் மு.ப. 9–30 சேருவதற்கான உச்சவரம்பு வயது என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : வயது உச்சவரம்பு 30.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அப்படி உச்சவரம்பு 30 என்று வைத்துவிட்டால், அவர்கள் அதற்கு அப்புறம் வேறு வேலைக்கு லாயக் கில்லாதவர்களாகப் போய் விடுகிருர்கள். அரசாங்க வேலைக்கு வருவதற்கு 26 தான் உச்சவரம்பு வயது. அந்த உச்சவரம்பு வயதைத் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அதிலே ஏதாவது சங்கடம் இருப்ப தாகத் தெரிந்தால் அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்கலாம்.